# வீட்டு முடிவெடுப்பு செயல்பாட்டில் முஸ்லிம் பெண்களின் பங்கேற்பு: தோப்பூர் கிராமத்தின் நிலை பற்றிய ஆய்வு

# Muslim Women's Participation in Household Decision Making: A Case Study Based on Thoppur Village

M.M. Shiyana[1] & A.K.Siyana[2]

[1]Assistant lecturer, Depart of Islamic Studies, South Eastern University of Sri Lanka
[2] Assistant lecturer, Depart of Islamic Studies, South Eastern University of Sri Lanka
shiyana@seu.ac.lk

**ஆய்வுசுருக்கம்**

சுமுகமான மற்றும் முறையான அபிவிருத்தி செயற்பாட்டில் பெண்களின் பங்களிப்பு இன்றியமையாதது. அதில் தீர்மானம் மேற்கொள்ளும் விடயமானது முக்கியம் பெறுகிறதுஎனினும் நடைமுறையில் பெண்கள் மீது காட்டப்படும் சமத்துவமற்ற போக்குகள் அவற்றினை பாதிப்பதாய் அமைகின்றன. இந்நிலையில் இவ்வாய்வானதுதோப்பூர்கிராமத்திலுள்ள முஸ்லிம் இல்லத்தரசிகளின்வீட்டு விவகாரங்களில் முடிவெடுக்கும் பகுதிகளை இனங்கண்டு அவற்றினை பகுப்பாய்வு செய்ய விளைகிறது.முதன்மை மற்றும் துணைத் தரவுகளை மையமாகக் கொண்ட இவ்வாய்வில் தோராயமாக தெரிவு செய்யப்பட்ட தோப்பூர்வாழ் இல்லத்தரசிகள் நேர்காணலுக்குட்படுத்தப்பட்டு தரவுகள் excel மூலம் பகுப்பாயப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளதுடன் ஆய்வுக்கோட்பாட்டு தயாரிப்புகளான இலக்கிய வெளியீடுகளும் மீளாயப்பட்டுள்ளன.வீட்டுவிவகாரங்களில் முடிவெடுக்கும் செயன்முறையில் தோப்பூர்வாழ் இல்லத்தரசிகளின் பங்கேற்பு குறிப்பிடக்கூடிய மட்டங்களில் சிறப்பாகக் காணப்படுவதோடு அவர்களின் முடிவெடுத்தல் நிலைக்கும் குடும்ப அமைப்புக்கும் இடையே குறிப்பிடக்கூடிய தொடர்பும் காணப்படுகிறது. இதன்படி வீட்டு வருமானம், தொழில், கணவரின் ஒத்துழைப்பு, பிள்ளைகளின் நலன்கள், வாழ்க்கை அனுபவங்களின் கூட்டாக்கம் போன்ற சில காரணிகள் இதனை எடுத்தியம்புகிறது. பெண்களின் உணர்வுகள், கல்வி, தைரியம், திருமணநிலை ஆகிய பிற காரணிகளும் குறிப்பிடக்கூடிய செல்வாக்கைச் செலுத்துகின்றன.குடும்பத்தில் முடிவெடுக்கும் பாத்திரத்தில் பெரும்பாலான இல்லத்தரசிகள் சுயாதீனமாகவே செயல்படுவதோடு கூட்டு முடிவெடுப்புகளின் தன்மை ஒப்பீட்டளவில் குறைவாகவும் காணப்படுகிறது.பெரும்பாலான இல்லத்தரசிகள்பொருளாதார விடயங்களில் முடிவெடுக்க பங்கேற்பது அரிதாகும். எனினும் ஒப்பீட்டளவில் கல்வி, சுகாதாரம், பிள்ளை வளர்ப்பு, மத விடயங்கள், வீட்டுக்கு பொருட்களை வாங்குதல் போன்ற பகுதிகளில் அதிகளவான பங்கேற்பும் குடும்பத்திட்டமிடலில் சமஅளவிலான பங்கேற்பும் காணப்படுவதை தரவுப்பகுப்பாய்வு முன்னிறுத்துகின்றது.எனவே பெண்களின் உரிமைகள், பெண்கள் வலுப்படுத்தல் மற்றும் அவர்களின் பங்களிப்பின் முக்கியத்துவம் குறித்து ஆய்வுகளை மேற்கொள்ளவும் பெண்கள் தொடர்பிலானவிழிப்புணர்வு திரட்டும் திட்டங்களை மேற்கொள்ளவும் இவ்வாய்வு துணைபுரியும் போன்ற சில பரிந்துரைகளை இக்கட்டுரை முன்வைக்கின்றது.

**திறவுச் சொற்கள்**: குடும்பம்,முடிவெடுத்தல் செயல்முறை,பெண்கள், தோப்பூர்

## 1. அறிமுகம்

இன்று மனித சமூகத்தில் பெண்களின் வகிபாகம் மிகப்பிரதானமானதாகும். அதனடிப்படையில் குடும்பம் உட்பட பெண்கள் பல்வேறுபட்ட துறைகளில் முன்னேற்றம் காண்பதற்கு அவர்களின் தீர்மானம் எடுக்கும் உரிமை முதன்மையானது. தீர்மானம் எடுத்தல் என்பது முக்கியமான ஒன்றைப்பற்றிதீர்மானிக்கும் செயன்முறையினைக் குறிக்கிறது.குறிப்பாக மக்கள் குழுவில் அல்லது ஒரு நிறுவனத்தில் முடிவெடுக்கும் பொறுப்பினை குறிக்கிறது (ஆக்ஸ்போர்ட் ஆங்கிலஅகராதி).வரலாறு முழுவதும் எல்லா விடயங்களிலும் முடிவெடுப்பதில் ஆண்களுக்கு உரிமைகள் வழங்கப்பட்டே வந்துள்ளன. ஒரு ஆணாதிக்க சூழலில் பெண்களின் பங்கேற்பு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. பாரம்பரியமாக பெண்கள் முடிவெடுக்கும் ஒவ்வொரு கட்டங்களில் அவர்களின் பங்கேற்பு குறைவாக உள்ளதுடன் பெரும்பாலும் முடிவெடுக்கும் விடயங்களில் அவர்கள் ஆலோசிக்கப்படுவதில்லை என்றும் அறியமுடிகிறது (Slovenia,1998).எனினும்இஸ்லாம் ஒரு பெண்ணுக்குரிய அனைத்து வகையான உரிமைகளையும் தீர்மானமெடுக்கும் சுதந்திரத்தையும் வழங்கி அவளை கண்ணியப்படுத்தி இருக்கிறது. பெண்களின் பல்வேறு நடவடிக்கைகளில் அவர்களது பங்குபற்றுதலானது குடும்ப அமைப்புக்கு உள்ளேயும் வெளியேயும் காணப்படுகிறது. ஹுதைபிய்யா உடன்படிக்கையில் உம்முசல்மா எனும் பெண்ணிடம் ஆலோசனை கேட்டு முடிவெடுத்ததை அல்குர்ஆன் உறுதிப்படுத்தியுள்ளது. மேலும் ஒரு பெண்ணின் சம்மதமின்றி அவளுக்கு திருமணம் செய்து வைக்க வேண்டாம் என்றும் வலியுறுத்தியுள்ளது (புஹாரி, முஸ்லிம்). ஒரு சமூகத்தில் முடிவெடுக்கும் சக்தியானது பெண்கள் அதிகாரம் பெறுவதற்குரிய ஒரு பகுதியாக கணிக்கப்படுகிறது (Kabir, 2013).அந்த வகையில் ஒரு பெண்ணால் மேற்கொள்ளப்படும் முடிவெடுத்தலானது அவளால் உணரப்படும் விடயங்கள், அவளுக்கு கிடைக்கப்பெறும் வெகுமதிகள், செலவுகள் மற்றும் சூழ்நிலைகள் என்பவற்றோடு மாறுபடுவதாகவும் அறியமுடிகிறது.

பெண்ணியக் கோட்பாட்டை முன்வைக்கும் பெண்கள் குழு, கொள்கை உருவாக்கம் மற்றும் செயற்படுத்தல் போன்றவற்றினூடாக பெண்களுடைய கருத்துக்கள் பிரதிநிதித்துவப்படுத்தப்பட வேண்டும் என்கின்றனர். மேலும் பெண்களின் உரிமைகள் மற்றும் தீர்மானம் மேற்கொள்வதில் பெண்களின் நிலை தொடர்பில் பல ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தேவ், ஜாக்குலின் (2010) ஆகியோரால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில் சுகாதார பாதுகாப்பு குறித்த முடிவெடுப்பில் நேபாளத்திலுள்ள பெண்களிடையே சமூகக் காரணிகள் எவ்வாறு பாதிக்கின்றன என்பது தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.இவ்வாறான பல பின்னணிகளில் முஸ்லிம்களை பெரும்பான்மையாகக் கொண்ட தோப்பூர் பிரதேசமானது வடக்கே அல்லைக் குளத்தையும் கிழக்கே சின்னவாய்க்காலையும் தெற்கே பள்ளிக்குடியிருப்பையும் மேற்கு சின்னக்கழுவான் பாலத்தினையும் கொண்டு அமைந்துள்ளது. இப்பிரதேசத்தில் மொத்தமாக 455 குடும்பங்களும் 755 ஆண்களும் 757 பெண்களுமாக காணப்படுகின்றனர். (தோப்பூர் கிராமசேவகர் அறிக்கை, 2020). இங்குள்ள குடும்பங்கள் பெரும்பாலும் தனிக்குடும்பங்களாகவே வாழ்கின்றமையை அவதானிக்க முடிந்தது. மேலும் வீட்டு முடிவெடுப்பில் பெண்கள் பங்கேற்பதன் நிலை தொடர்பிலான ஆய்வுப்பற்றாக்குறையும் உள்ளது. இதனடிப்படையில் தோப்பூர் கிராம சூழலில் வீட்டுவிவகாரம் தொடர்பிலான

முடிவெடுப்பில் பெண்களின் பங்களிப்பு எவ்வாறுள்ளது? எனும் ஆய்வுப் பிரச்சினையின் பின்னணியில் எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட இல்லத்தரசிகளிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## 2. ஆய்வு முறை

பண்புரீதியான இவ்வாய்வின்ஆய்வு மாதிரியானது தோப்பூர் கிராமத்திலுள்ள இருபதுமுஸ்லிம் குடும்பங்களை சேர்ந்த இல்லத்தரசிகளிடம் இருந்து தோராயமாக பெறப்பட்டுள்ளது.இவ்வாறு முதன்மைத்தரவைச் சேகரிக்க மூடிய மற்றும் திறந்த கேள்விகளின் கலவையுடன் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் அட்டவணை உருவாக்கப்பட்டது. அத்தோடு ஆய்வின் கோட்பாட்டு அம்சங்களைப் பெற புத்தகங்கள், ஆய்வுக்கட்டுரைகள் மற்றும் வெளியிடப்பட்ட பிற ஆவணங்களிலிருந்து இரண்டாம் நிலைத்தரவுகள் சேகரிக்கப்பட்டன.இல்லத்தரசிகளிடம்மேற்கொள்ளப்பட்ட ஆழ்ந்த நேர்காணல்களின் தரவுகளானது excelமென்பொருள் துணையுடன் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டுள்ளதோடு அவை அட்டவணை மற்றும் வரைபடம் மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளன.

## 3. ஆய்வு நோக்கங்கள்

வீட்டு விவகாரங்களில் முஸ்லிம் பெண்கள் முடிவெடுக்கும் பங்கினை இனங்கண்டுகொள்வதும் அவற்றை பகுப்பாய்தலும் ஆய்வின் நோக்கங்களாக அமைந்துள்ளன.

## 4. கலந்துரையாடல்களும் கண்டறிதல்களும்

### 4.1 நேர்காணலில் பதிலளித்தவர்களின் பண்புகள்

நேர்காணலின் போது பதிலளித்த பெரும்பாலான பெண்களின் குடும்ப அளவினைப் பொறுத்தவரை மூன்று முதல் ஐந்து உறுப்பினர்களைக் கொண்ட கருக்குடும்ப அமைப்பாக இருக்கிறது. அத்தோடுஅவர்களின் பொருளாதார நிலைகளை பொறுத்தவரை பெரும்பாலான குடும்பங்கள் நடுத்தரவர்க்கமாக உள்ளதோடு பெண்களைப் பொறுத்தமட்டில் வீட்டிலும் சுயதொழில் செய்யும் பகுதியிலும் கடினமான வாழ்க்கையைத் தாங்குவதை நேர்காணல்களின் போது அறிய முடிந்தது.ஆய்வுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களின் பண்புகளில் வயது, கல்வி, குடும்ப அளவு, தொழில் மற்றும் மாத வருமானம் ஆகியன கருத்திற்கொள்ளப்பட்டன.ஒரு குடும்பத்தில் முடிவெடுக்க பங்கேற்பதற்கு கிராமப்புர பெண்களின் திருமணநிலை மிக முக்கியமான காரணிகளில் ஒன்றாகவுள்ளது. அதனடிப்படையில் இவ்வாய்வுக்காக இணைத்துக் கொள்ளப்பட்ட பெண்கள் அனைவரும் திருமணமான பெண்களாக உள்ளனர்.பதிலளித்தவர்களின் கல்வி நிலைகளைப் பொறுத்தவரை எல்லா பெண்களும் முறையான கல்வியினைப் பெற்றவர்களாக உள்ளனர். இதன்படி எட்டுப் பேர் இடைநிலை கல்வியினையும் ஏழு பேர் உயர்தரக் கல்வியினையும் ஐந்து பெண்கள் பட்டப்படிப்பை பூர்த்தி செய்தவர்களாகவும் உள்ளனர். இவர்களுள் இரண்டு பெண்கள் சுய தொழிலையும் ஐந்து பெண்கள் அரச நிறுவனங்களில் தொழில் புரிபவர்களாகவும் இருக்கின்றனர்.வயது மட்டங்களைப் பொறுத்தவரை 20-40 வயதுக்கு இடைப்பட்டவர்கள் பெரும்பான்மையினராகக் காணப்படுகின்றனர்.

### 4.2 வீட்டு முடிவெடுப்பில் பெண்கள் பங்கேற்பு

முடிவெடுப்பது எப்போதும் சமூக அமைப்பில் ஒரு முக்கிய பகுதியாக இருக்கின்றது. இதன்படி தோப்பூர் கலாசாரத்தில்பெண்கள் பொதுவாக சுயமாகவும் தங்கள் கணவர்கள் மற்றும் பிற குடும்பத்தினருடன் கூட்டாக முடிவெடுப்பதற்கும் அனுமதிக்கப்படுகிறார்கள்.பெண்களின் குடும்ப முடிவெடுக்கும் பாத்திரத்தில் குறிப்பிடத்தக்க நேர்மறையான செல்வாக்கைக் கொண்ட நடத்தைகள் காணப்படுகின்றன.அறிவு, திருமணக் கூட்டாளர்களின் ஒத்துழைப்புக்கள்,பெண்களின் தைரியம்,கல்வி,வாழ்க்கை அனுபவங்கள்,குழந்தை மற்றும் பொருளாதாரம் போன்ற சில காரணிகள் வீட்டு முடிவெடுப்பில் செல்வாக்குச் செலுத்துகின்றன(Binniyang,2013).வீட்டில் முடிவுகளை எடுப்பது தொடர்பான விடயங்களில் மொத்தம் 12 பகுதிகள் இணங்காணப்பட்டு அவை பரிசீலிக்கப்பட்டன. அவற்றுள் தொழில்,கல்வி,சொத்து வாங்குதல் மற்றும் விற்றல், குடும்ப கட்டுப்பாடு, வீட்டு பொருட்கள்கொள்வனவு மற்றும் குடும்பத்தின் பிற செலவுகள்,பிள்ளை வளர்ப்பு,வைபவம் மற்றும் விழாக்கள்,குடும்ப திட்டமிடல்,சுகாதார பாதுகாப்பு,அழகுபடுத்தல்,உறவினர் வீட்டுக்குச் செல்தல்,பொழுதுபோக்கு போன்ற அம்சங்கள் குறிப்பிடத்தக்கவை. எனவே வீட்டுமட்டத்தில் முடிவெடுக்கும் பணியில் பெண்களுக்கு அதிகமான அணுகல் உள்ளதை ஆய்வு முடிவுகள் எடுத்தியம்புகின்றன.மும்தாஜ் மற்றும் ஐசியா (1982) ஆகியோர் தங்கள் ஆய்வில்கூறியுள்ளதனைப் போன்று பெண்கள் முறையான கல்வியை பெறும்போது அவர்கள் முடிவெடுக்கும் அதிக திறனைப் பெறுகிறார்கள்.அநேகமானவர்கள் தமது கணவருடனும் பெற்றோரின் ஆலோசனையுடனும் கூட்டு முடிவெடுப்பை மேற்கொள்வதுடன் ஒப்பீட்டளவில் பெரும்பாலான இல்லத்தரசிகள் சுயமாகவே வீட்டில் முடிவெடுக்கும்பாத்திரத்தினை வகிக்கிறார்கள்.இதனை பின்வரும் அட்டவனையினூடாக விளங்கலாம்.

அட்டவணை 3.2.1பெண்களின் வீட்டு முடிவெடுப்புக்களின் தன்மை

| **இல** | **முடிவெடுத்தல் செயற்பாடுகள்** | **தனி முடிவெடுப்பு** | **கூட்டு முடிவெடுப்பு** |
|---|---|---|---|
| 01 | பொருட்கொள்வனவு | 08 | 12 |
| 02 | தொழில் | 08 | 12 |
| 03 | சொத்து வாங்குதல் விற்றல் | 02 | 18 |
| 04 | மத விடயங்கள் | 16 | 04 |
| 05 | வைபவம் மற்றும் விழாக்கள் | 16 | 04 |
| 06 | பிள்ளை வளர்ப்பு | 12 | 08 |
| 07 | கல்வி | 12 | 08 |
| 08 | குடும்ப திட்டமிடல் | 07 | 13 |
| 09 | சுகாதார பாதுகாப்பு | 18 | 02 |
| 10 | அழகுபடுத்தல் | 11 | 09 |
| 11 | உறவினர் வீட்டுக்கு செல்தல் | 08 | 12 |
| 12 | பொழுதுபோக்கு | 08 | 12 |
| | **மொத்தம்** | **126** | **114** |


(மூலம்: கள ஆய்வு, 2020)

ஏறக்குறைய பன்னிரண்டு பகுதிகளிலும் பெண்களின் தனி மற்றும் கூட்டு முடிவை உள்ளடக்கியதனை அட்டவணை சுட்டிக்காட்டுகிறது. ஆனால் அது அளவு மட்டத்தில் வேறுபட்டது. முடிவுகளின் கூட்டு மதிப்பெண்களின்படி அவர்களின் பங்கேற்பு நிலை குடும்பத்தில் ஒப்பீட்டளவில் சிறப்பாக இருப்பதனை அறியலாம். இதன்படி சுகாதார பாதுகாப்பு விடயங்கள், சமைத்தல், ஆடைகள் தெரிவு செய்தல், அழகுபடுத்தல், பரிசுப் பொருட்களை வாங்குதல், பிள்ளைகளை பாடசாலை மற்றும் மதரஸாவுக்கு சேர்த்தல், மாலை நேர வகுப்புகளுக்கு அனுப்புதல் போன்ற கல்வி சார்ந்த விடயங்கள், சமய விழாக்களை கொண்டாடுதல்,பிறந்தநாள் விழாக்களை ஏற்பாடு செய்தல், பிள்ளை வளர்ப்பு,பொழுதுபோக்கு, வீட்டின் சுற்றுப்புற சூழலை அலங்கரித்தல், வீட்டுத் தோட்டம் மேற்கொள்ளல், கால்நடை வளர்ப்பு, போன்ற விடயங்களில் சுயாதீன முடிவெடுப்புகள் அதிகமாக உள்ளன. மேலும் சொத்துக்களை வாங்குதல் விற்றல், தொழிலினை மேற்கொள்ளல், குடும்பத்திட்டமிடல், பொருட்கொள்வனவு,வெளியிடங்களுக்கு பயணித்தல், வங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ளல்போன்ற விடயங்களில் மேற்கொள்ளப்படும் கூட்டு முடிவெடுப்புகள் ஒப்பீட்டளவில் சற்றுக் குறைவாகவும் உள்ளது.

### 4.3 பெண்களின் வீட்டு முடிவெடுப்பு மட்டங்கள்

தோப்பூர் பிரதேச இல்லத்தரசிகளின் வீட்டு முடிவெடுப்புகளைப் பொறுத்தவரை அவை பல்வேறு துறைகளை சார்ந்த முடிவெடுப்புகளாக உள்ளதோடு அவர்களின் பங்களிப்பு மட்டங்கள் வெவ்வேறுபட்ட அளவுகளில் காணப்படுகின்றன. இதனை பின்வரும் வரைபடத்தின் மூலம் விளங்கலாம்.

வரைபடம் 3.3.1பெண்களின் வீட்டு முடிவெடுப்பு மட்டங்கள்




(மூலம்: கள ஆய்வு, 2020)

பிள்ளைகளின் கல்வி விடயங்கள் மற்றும் வீட்டுக்குத் தேவையான பொருட்களை கொள்வனவு செய்தல் போன்ற விடயங்களில் பெண்களின் முடிவெடுத்தல் பங்கேற்பு அதிகமாகவே உள்ளன. மேலும் சுகாதார விடயங்கள், பாதுகாப்பு, வைத்தியரை நாடுதல், வீட்டின் சுற்றுப்புற சூழலை தூய்மைப்படுத்தல் மற்றும் அலங்கரித்தல், பிள்ளை வளர்ப்பு,வீட்டிலுள்ளோருக்கு ஒழுக்கம் சார்ந்த விடயங்களை புகட்டுதல், உறவினர் வீட்டுக்கு செல்லல், ஆன்மீகம் சார்ந்த விடயங்கள்,வைபவங்களில் கலந்து கொள்ளல், விழாக்களை கொண்டாடுதல் போன்ற

முடிவெடுப்பில் அதிகமான பங்களிப்பும் குடும்பத் திட்டமிடலில் அவர்களின் முடிவெடுக்கும் பங்கேற்பு சம அளவிலும் கொடுக்கல் வாங்கல்,வீடு கட்டுமானம், கடன்மற்றும் பொருளாதார நிர்வாக முடிவெடுப்புகளில் குறைந்தளவான பங்கேற்பும் காணப்படுகின்றது.

மக்களின் சமூக-பொருளாதார நிலையின் மிக முக்கியமான குறிகாட்டிகளில் வருமானம் ஒன்றாகும். இது வீட்டுமட்டத்தில் முடிவெடுக்கும் செயல்முறையில் செல்வாக்கு செலுத்துகிறது. ஒப்பீட்டளவில் தொழிலுக்கு செல்கின்ற பெண்களின் முடிவெடுத்தல் பங்கேற்புஅதிகம் என்பதனை நேர்காணலின் போது கண்டறிய முடிந்தது. அதுமட்டுமன்றி குறைந்தளவான கல்வித்திறனைக் கொண்ட பெண்களிடம் பொருத்தமான மேலாண்மை திறன் இல்லாதது பொருளாதார முன்னேற்ற வழியில் முக்கிய தடையாக இருப்பதையும் பெண்களின் பதில்களில் இருந்து அறியமுடிந்தது. அதனடிப்படையிலேயே பொருளாதார ரீதியான விடயங்களில் பெண்களின் முடிவெடுக்கும் பங்கேற்பு குறைவாகவும் பெரும்பாலும் அவை வீட்டிலுள்ள ஆண் தலைமையினால் எடுக்கப்படுவதையும் காணக்கூடியதாகவுள்ளது. அதேநேரம் பெண்களின் முடிவெடுத்தல் பங்கேற்பினை விளக்கமளிக்கும் ஏனைய காரணிகள் உயர்மட்டங்களில் உள்ளதும் கவனிக்கத்தக்கது.எனினும்பதிலளித்தவர்களிடையே அடையாளம் காணப்பட்ட வீட்டு முடிவெடுப்பு சிக்கல்கள் குறைவாக இருந்தன. அவற்றுள் கல்விப்பற்றாக்குறை, குறைந்த வருமானம்,சுய மற்றும் சமூக விழிப்புணர்வு இல்லாதது ஆகியன குறிப்பிடத்தக்கவை. எனவே பெண்கள் தங்கள் உரிமைகள் குறித்து விழிப்புடன் இருப்பதோடு பெண்களின் கல்வி நிலையை அதிகரிப்பதில் அக்கறையுடன் செயற்பட வேண்டும்.

## 5. முடிவுரை

இந்த ஆய்வு வீட்டு முடிவெடுப்பதில் பெண்களின் பங்களிப்பை மதிப்பிடுவதற்கான ஒரு முயற்சியாகும். இதன்படி தோப்பூர் கிராமத்திலுள்ள இல்லத்தரசிகளுக்குவீட்டு விவகாரங்களில் முடிவெடுக்க அதிகமான தேர்வுகள் உள்ளன.கல்வி, சுகாதாரம், பிள்ளை வளர்ப்பு, மத விடயங்கள், வீட்டுக்கு பொருட்களை வாங்குதல் போன்ற பகுதிகளில் அதிகளவான பங்கேற்பும் குடும்பத் திட்டமிடலில் சமஅளவிலான பங்கேற்பும் காணப்படுவதோடு பொருளாதார விடயங்களில் அரிதான பங்கேற்பும் காணப்படுகிறது. இன்னும் தங்கள் வீட்டு விவகாரங்களில் மேற்கொள்ளும் கூட்டு முடிவெடுப்புகளை விடவும் தனி முடிவெடுப்புகளே பெண்கள் மத்தியில் அதிகரித்தும் காணப்படுகின்றன. பெண்களின் உணர்வுகள்,தைரியம், வீட்டிலுள்ளோரின் ஒத்துழைப்பு, வருமானம், குடும்ப நிலை, கல்வி ஆகியன அவர்களின் முடிவோடு சாதகமாக தொடர்புபட்டுள்ளதை ஆய்வு முடிவுகள் பிரதிபலிக்கின்றன.சமூகத்தில் பெண்களின் பங்கேற்பு குறித்த ஆய்வுகளை மேற்கொள்ளல்,எல்லா மட்டங்களிலும் பெண்களின் நிலையான வளர்ச்சிக்கும் பங்கேற்புக்கும் அதிக வாய்ப்புகளை வழங்குதல் போன்ற சில பரிந்துரைகளையும் இவ்வாய்வு முன்மொழிகிறது.

## உசாத்துணைகள்

Bala, M. And Monga, O.P.(2004). Impact of women's Employment on Decision Making in Families. *Social Welfare,* 51(5): 13-16

Dev, Acharya & Jacquilin.(2010).Women's Autonomy in Household Decision Making Ademographic Study in Nepal. *Reproductive health.*7.15.10.1186/1742-4755-7-15

Devi, M.S. And Rylu, T.R.(2013). Perception Of Working And Non Working Women On Their Relative Empowerment In Self Decisions In Urban Families. Indian Psychological Review, 60 (1):10-16

Devi, M.S. And Rayalu, T.R.(2002). A Study On Differences Between Self And Joint Decisions In Personal Affairs, Children's Affairs And Household Affairs For Both Working And Non-Working Women In Urban Families. *Indian Psychological Review*, 58(2): 103-112.

Hoque, M. And Y. Itohara.(2008). Participation AndDecision Making Role Of Rural Women In Economic Activities: A Comparative Study For Members And Non-Members Of The Micro-Credit Organizations In Bangladesh. *Journal OfSocial Sciences*

Jan, M. And S. Akhtar. (2008). An Analysis Of Decision Making Power Among Married And Unmarried Women. Stud. *Home Comm. Sci*., 2(1):43-50.

Kabir , Muhamed & Shathi, A.K.M. (2013). Household Decision Making Process Pf Rural Woman In Bangaladesh. *Journal Of Humanities And Social Sciences. 10. 69-78*

Mumtaz, K.A. And Aysha N. (1982). Status OfRural Women In India. New Delhi: Ashish Publishing House, 16-34 Pp.

Oxford Dictionary Definition Of Decision Making. Retrived From Https://Www/Oxfortlearnersdictionaries.Com/Definition/America-English/Dicision-Making #:~:Text=Decision-Making-Noun,Decision-Maker

Profeta, Paola. (2017). Gender Equality In Dicision Making Positions. The Efficiency Gains. *Intereconomics.52. 34-37*

Slovenia, M.M. 1998. *Women AndFamily In Rural Development*. New Delhi: Discovery Publishing House.